GST - MSME
PASSPORT - IE CODE
PRIVATE LIMITED
TRUST - TRADE MARK
REGISTRATION
9003146534

பள்ளிக்கரணை நியூஸ்
PALLIKARANAI NEWS




Contact: 9500018063 pallikaranainewstv@gmail.com E-PAPER

# ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறை

# College to Corporate Transition (C2C) என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறை!






ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறை 16-9-2023 அன்று, "College to Corporate Transition (C2C)" என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறையை நடத்தியது. சென்னையில் உள்ள கல்லூரி மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடித்தப்பின் எதிர்கால தொழில்சார் திட்டமிடலுக்குத் தேவையான தகுதியையும், அறிவுத்திறனையும் வளர்த்துக்கொள்ளப் பயன்படுவதே இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டதன் நோக்கமாகும். ஒரு மாணவன் தனது கல்விகற்கும் பருவத்திலிருந்து தொழில்சார் உலகுநோக்கித் தன்னை மாற்றிக்கொள்ளத் தேவையான செயல்முறையைக் கற்றுக்கொடுக்கும் விதமாக இப்பயிற்சிப்பட்டறை அமைந்தது. ஒருமாணவனுக்கு வேலையைப் பெறுவது தொடர்பான அடிப்படை நுணுக்கங்களையும், சூழலையும் உருவாக்கிக் கொள்வதற்கான வழிகாட்டுதலை இப்பயிற்சிப்பட்டறை அளித்தது.

CMA திவ்யா அபிஷேக்,




PALLIKARANAI NEWS
YouTube
LIKE & SUBSCRIBE
9500018063

Chairperson, Southern India Regional Council of the Institute of Cost Accountants of India, இப்பயிற்சிப்பட்டறையைச் சிறந்த முறையில் தொடங்கிவைத்தார். திவ்யா அபிஷேக் அவர்கள் முதலாளிகளின் எதிர்பார்ப்புகள் குறித்தும், மாணவர்கள் சவால்களை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் குறித்தும் விளக்கினார்.

இப்பயிற்சிப்பட்டறையில் அடுத்ததாக இரண்டு தொழில்துறை சார்ந்த அமர்வுகள், திரு. வி.ஸ்ரீதர், Retired Assistant Commisioner, Department of Civil Supplies and Conusmer Protection, Chennai மற்றும் மிஸ். என். ஹர்ஷினி Communication Traniner and Consultant – Certified Business, Chennai ஆகிய சிறந்த பேச்சாளர்களால் நடத்தப்பட்டது. இந்த இரண்டு அமர்வுகளும் இப்பயிற்சிப்பட்டறையின் மையக்கருத்துக்கு ஏற்ற பல தலைப்புகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. இவ்விழாவின் நிறைவுரையைத் திரு.ஹருண் நிஸாம், Managing Director, Unique Technologies and Consulatancy Private Limited, Chennai, வழங்கியதோடு மாணவர்களுக்குப் பங்கேற்பு சான்றிதழையும் வழங்கினார் இப்பயிற்சிப்பட்டறையில் 25 கல்லூரிகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

முதல்வர் முனைவர் T.S.சாந்தி அவர்கள் இனிய முறையில் அனைவருக்கும் வரவேற்பு நல்கினார். பின்னர் முனைவர் எம். ஜெயா. முதன்மையர் மற்றும் வணிகவியல் துறைத்தலைவர் அவர்கள் நன்றி உரை வழங்கினார்.









Owned and Published by M.KADHAR BAVA, Published at No.158, Sathyavani Muthu Nagar, Pallavan Salai, Chennai - 600 002. Printed by S. Ali Mohamed Sayeed, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussion, Border Thottam, Royapettah, Chennai -14, Editor - M.KADHAR BAVA